## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 115/2024**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜீவா | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 7th April 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போதே லக்காபுரத்தில் வசித்து கொண்டு டிராவல்ஸ் வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆகாஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது சாட்சி கையொப்பம் என்னடையது தான். நான் காவல்நிலையத்திற்கு ஒரு வேலையாக சென்றபோது போலீஸார் ஒரு தாளில் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன விபரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ சாட்சியாக அறவிக்கப்படுகிறார்)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

லக்காபுரம் முத்தூர் மெயின் ரோடு கதவு எண்.68 குமரன் வீதி, என்பது எனது முகவரி தான் என்றால் சரிதான். அதை நான் போலீஸாரிடம் சொல்லாமல் அவர்களுக்கு அதுபற்றி தெரியாது என்றால் நான் வேறு வேலையாக காவல்நிலையம் சென்றபோது போலீஸார் என்னிடம் கேட்டு வாங்கினார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 30.12.2021 ம் தேதி காலை 8.00 மணிக்கு நானும் கணபதி என்பவரும் இருசக்கர

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.07 17:08:35 +0530

வாகனத்தில் 46 புதுார் சந்திப்பு அருகில் சென்றபோது மொடக்குறிச்சி போலீஸார் ஆகாஷ் என்பவரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் இல்லை. 10.00 மணிக்கு ஆகாஷ் ஆஜர் செய்த 3 பவுன் தங்கச் செயினையும், கருப்பு யமாகா FZ பைக்கையும் போலீஸார் கைப்பற்றி என்னிடம் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் இல்லை. தற்போது நான் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.07 17:08:40 +0530